# ஜீவனைத் தந்ததும் அல்லாமல்

ஜீவனைத் தந்நததும் அல்லாமல்
உம் தயவையும் பாராட்டினீர்
உம் பராமரிப்பு என் ஆவியைக் காத்து வந்தது
அல்லேலூயா – 8

1.உம் கிருபையினாலே இறங்கினீர்
என் மீறுதல்கள் நீங்க கழுவினீர்
நான் துர்குணத்தில் உருவாகினேன்
என் தாயின் கருவில் என்னைத் தெரிந்தீரே
சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டித்தீரே
உந்தன் ஆவியை உள்ளத்தில் புதுப்பித்தீரே
உம் சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலே
உம் பரிசுத்த ஆவியால் நிரப்பினீரே – அல்லேலூயா

2.உள்ளத்தில் உண்மையை வரும்பினீர்
ஞானத்தை எனக்குத் தந்தீரே
ஈசோப்பினால் என்னைக் கழுவினீர்
உறைந்த மழையைப்போல் வெண்மையானேன்
என் பாவங்களை பாராமலே
என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கினீரே
சிலுவையில் சிந்திய இரத்தத்தாலே
உம் சொந்த பிள்ளையாய் மாற்றினீரே – அல்லேலூயா